3143

ඔියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** "பார்வதி நாயகனே சரணம்" என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் மேள எண்
(1) 51 (2) 56 (3) 57 (4) 65 (5) 67

**2.** பின்வருவனவற்றுள் ஷாடவ வக்ர சம்பூர்ண இராகம்
(1) ரீதி கௌளை (2) பேகட (3) ஶ்ரீராகம் (4) ஸாரங்கா (5) கமாஸ்

**3.** ஓர் அடதாள வர்ணத்தின் அங்கங்களில் சம எடுப்பில் ஆரம்பிக்கும் அங்கம்
(1) பல்லவி (2) அனுபல்லவி (3) முத்தாயிஸ்வரம்
(4) சரணம் (5) சரணஸ்வரங்கள்

**4.** மனோதர்ம இசையில் மத்யமகாலம் பாடுதல் என அழைக்கப்படுவது
(1) இராகம் (2) தானம் (3) பல்லவி
(4) நிரவல் (5) கற்பனாஸ்வரம்

**5.** அப்பர் தேவாரத்தில் இடம்பெறும் பாவினங்களுள் ஒன்று
(1) திருநேரிசை (2) திருத்தாளச்சந்தி (3) திருவிராகம்
(4) யாழ்முரி (5) மாலைமாற்று

**6.** தாது - மாது சம்பந்தமான அணிகளுள் ஒன்று
(1) சிட்டைஸ்வரம் (2) மகுட ஸாகித்தியம் (3) அனுப்பிராஸம்
(4) மத்திமகால ஸாகித்தியம் (5) யமகம்

**7.** 'அலகுயாழ்' என்னும் சிறப்புப் பெயரினையுடைய வாத்தியம்
(1) நாதஸ்வரம் (2) மகரயாழ் (3) கெஞ்சிரா
(4) சங்கு (5) முகர்சிங்

**8.** ஸரிஸதாத - ஸரிஸபாப என்னும் ஸ்வரக் கோர்வையினை இசைக்கும்போது ஏற்படும் கமகம்
(1) மூர்ச்சனை (2) ஆந்தோளிதம் (3) டாலு
(4) ஸ்புரிதம் (5) ஆஹதம்

**9.** இசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக இந்திய நுண்கலை மன்றம் வழங்கும் விருது
(1) பத்மபூஷண் (2) இசைப்பேரறிஞர் (3) சங்கீதகலாநிபுணர்
(4) கலைமாமணி (5) இசைக்கலைமணி

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**10.** பண்டித் ரவிசங்கர் எனும் ஹிந்துஸ்தானி இசை வல்லுனரால் வாசிக்கப்பட்டு சிறப்புப் பெயர்பெற்ற வாத்தியம்
(1) சித்தார் (2) ஸரோட் (3) ஷெனாய் (4) தபேலா (5) ஸாரங்கி

**11.** புன்னாகவராளி இராகத்தின் ஆரோகணம் ஆரம்பிக்கும் ஸ்வரம்
(1) மத்தியஸ்தாயி ஸ்ட்ஜம் (2) மத்தியஸ்தாயி பஞ்சமம்
(3) மந்திரஸ்தாயி தைவதம் (4) மந்திரஸ்தாயி நிஷாதம்
(5) அனுமந்திரஸ்தாயி நிஷாதம்

**12.** பின்வருவனவற்றுள் மத்யமவர்ஜ இராகங்களை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு
(1) ஶ்ரீரஞ்சினி, மோகனம் (2) பிலஹரி, காம்போஜி
(3) ஹம்சத்வனி, மோகனம் (4) ஹிந்தோளம், நவரஸகன்னட
(5) ஆரபி, ஸாவேரி

**13.** அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுதி
(1) திருவிருத்தம் (2) மூத்த திருப்பதிகம்
(3) திருவூஞ்சல் பாடல் (4) பூதவேதாள வகுப்புப் பாடல்
(5) திருச்சாழல்

**14.** ஒரு இராகத்தை ஆலாபனை செய்யும்போது இடையிடையே முடிக்கப்படும் ஸ்வரம்
(1) நியாசம் (2) அபன்னியாசம் (3) வின்னியாஸம்
(4) பகுத்துவம் (5) அல்பகுத்துவம்

**15.** உத்சவப் பிரபந்தம் என்னும் இசைநூலின் ஆசிரியர்
(1) சுவாதித்திருநாள் மஹாராஜா (2) திருவாங்கூர் ராமனாத பாகவதர்
(3) மஹாவைத்தியனாதையர் (4) சுப்பராம தீட்சிதர்
(5) முத்தையா பாகவதர்

**16.** பொதுவாக ஒரு இசைக்கச்சேரியின் ஆரம்பத்தில் பாடப்படும் உருப்படி,
(1) தேவாரம் அல்லது பதம்
(2) பதம் அல்லது வர்ணம்
(3) விருத்தம் அல்லது கிருதி
(4) விநாயகர் கீர்த்தனை அல்லது ஸ்வரஜதி
(5) விநாயகர் கீர்த்தனை அல்லது வர்ணம்

**17.** ஈழத்து வாய்ப்பாட்டுக் கலைஞர் என். சண்முகரத்தினம் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்கள்
(1) இசைவேந்தர், இசைக்குரிசில், சங்கீதவித்வான்
(2) இசைமாமணி, இசைஞானஜோதி, கானவாரிதி
(3) இசைவேந்தர், கானவித்யாபூஷணம், இசைச்சக்கரவர்த்தி
(4) சங்கீதவித்துவமணி, இசைவேந்தர், இசைப்புலவர்
(5) கலைச்சுடர், சங்கீதசிரோன்மணி, இசைஞானவாரிதி

**18.** விநாயகராம் அவர்களால் வாசித்துப் பிரபல்யம் அடைந்த இசைக்கருவி
(1) தவில் (2) முகர்சிங் (3) கெஞ்சிரா
(4) கடம் (5) நாதஸ்வரம்

**19.** சில கோயில்களில் ஓதுவார்கள் தேவாரம் பாடும்போது பயன்படுத்தும் ஹிந்துஸ்தானிய வாத்தியம்
(1) ஸாரங்கி (2) சித்தார் (3) ஷெனாய்
(4) ஸரோட் (5) கோட்டு வாத்தியம்

**20.** நரம்பு வாத்தியங்களில் சுருதியைக் கூட்டிக் குறைப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்படும் பாகங்கள்
(1) ஸாரணி, பிருடை (2) பிருடை, சுருதிமணி
(3) சுருதிமணி, நாகபாசம் (4) பிருடை, நாதக்குச்சி
(5) குதிரை, மேரு

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**21.** ஈழத்து இசைமேதை வி. தட்சணாமூர்த்தி அவர்களின் தவில் வாசிப்பின் சிறப்பினைக்கருதி வழங்கப்பட்ட பரிசுகள்
(1) தங்கத்தவில்க்கேடயம், வெள்ளிக்கேடயம்
(2) தங்கக் கோபுரம், தங்கக் காசு
(3) தங்கத்தவில்க்கேடயம், பொற்கிழி
(4) தங்கப் பதக்கம், தங்கக் கோபுரம்
(5) தங்கக் கோபுரம், தங்கத்தவில்க்கேடயம்

**22.** த்விஜாவந்தி இராகத்தின் சாயலை ஒத்த இராகத் தொகுதி
(1) ஸகானா, வராளி, கேதாரகௌளை
(2) பேகடா, யதுகுலகாம்போதி, ஸகானா
(3) ஸகானா, கேதாரகௌளை, யதுகுலகாம்போதி
(4) கேதாரகௌளை, காம்போஜி, சாரங்கா
(5) பேகடா, கேதாரகௌளை, ஆரபி

**23.** இருவரது பங்குபற்றுகையைக் கொண்டமைந்த தருக்களை மாத்திரம் கொண்டமைந்த தெரிவு
(1) ஐக்கினித் தரு, ஸ்வாகத தரு
(2) சம்வாத தரு, கோலாட்ட தரு
(3) வர்ணனைத் தரு, உத்தர பிரதியுத்தர தரு
(4) சம்வாத தரு, உத்தர பிரதியுத்தர தரு
(5) பிரவேசிக தரு, ஐக்கினித் தரு

**24.** "ஸ்வாமி நீ மனமிரங்கி..." எனும் பதவர்ணத்தில் இடம்பெறாத ஸ்வரம்
(1) பஞ்சமம் (2) சுத்த மத்யமம்
(3) சாதாரண காந்தாரம் (4) சதுஸ்ருதி தைவதம்
(5) கைஷிகி நிஷாதம்

**25.** திருவாவடுதுறை இராஜரத்திமைப்பிள்ளை அவர்கள் நடித்த திரைப்படம்
(1) பக்த குசேலர் (2) கவி காளமேகம் (3) நந்தனார்
(4) காளிதாசர் (5) ரிஷ்ய சிருங்கர்

**26.** நாட்டுப்புற இசை நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரிக்கும்போது தவிர்க்கப்படவேண்டிய இசைக்கருவி
(1) சங்கு, பறை (2) தப்பு, உடுக்கை (3) பறை, டோல்கி
(4) சல்லாரி, மத்தளம் (5) தபேலா, வயலின்

**27.** "நன் நிலை வரும்போது நம்மிரு கண்ணே" எனும் பாடல்
(1) சங்கிலியன் நாடகப்பாடல் (2) கோவலன் கண்ணகி நாடகப்பாடல்
(3) வடமோடிக்கூத்துப் பாடல் (4) தேயிலைக் கொழுந்துப் பாடல்
(5) தென்மோடிக்கூத்துப் பாடல்

**28.** பின்வருவனவற்றுள் மனதிற்கு உற்சாகத்தைத் தரும் விறுவிறுப்பான பாடல்வகை
(1) பதவர்ணம் (2) சௌக்ககாலக் கிருதி (3) திருவாசகம்
(4) நாட்டார் பாடல் (5) ஜாவளி

**29.** கிற்றார் வாத்தியத்தில் உள்ள 6 தந்திகளையும் வாசிக்கும்போது இடமிருந்து வலமாக அவற்றை சுருதி கூட்டும் முறை
(1) E, B, G, D, A, E (2) G, B, E, D, A, E (3) B, G, E, A, D, E
(4) A, D, E, G, B, A (5) E, A, D, G, B, E

**30.** உபாங்க கண்டத்தில் அமைந்துள்ள இலட்சண கீதம்
(1) முகாரி ராகம் (2) ரவிகோடிதேஜ (3) ரேவதி ராகம்
(4) நடனமாடிய (5) வாரண முகனே

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**31.** "ஆவினமெலாம்" எனும் சூளாதி அமைந்துள்ள தாளம்
(1) திஸ்ர அட (2) சதுஸ்ர ஏகம் (3) மிஸ்ர திரிபுடை
(4) சதுஸ்ர மட்டியம் (5) சதுஸ்ர ரூபகம்

**32.** இராகங்களின் வடிவம் அழிந்து போகாமல் இருப்பதற்கு காரணமானது எனக் கருதப்படும் உருப்படி
(1) கிருதி (2) கீர்த்தனை (3) வர்ணம் (4) ஜாவளி (5) தில்லானா

**33.** அமிர் குஸ்ரு எனும் ஹிந்துஸ்தானி வாக்கேய காரரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உருப்படி வகைகள்
(1) தரானா, கயால் (2) கரனா, குல்பானா (3) தும்ரி, தரானா
(4) துர்பத், தரானா (5) குல்பானா, தரானா

**34.** "பாஹிமாம் ஸ்ரீராஜராஜேஸ்வரி" என்னும் சௌககாலக் க்ருதி அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண - அவரோகணம்
(1) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமரிகமரிஸ (2) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ
(3) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதநிபதமகரிஸ (4) ஸரிகமபதநிஸ் - ஸ்தபமரிஸ
(5) ஸரிகமபதநிஸ் - ஸ்நிபமகரிகஸ

**35.** பைரவி - மாஞ்சி என்னும் இராகச்சோடி ஒன்றுக்கொன்று வித்தியாசப்படக் காரணமான அம்சம்
(1) தாய் ராகம் (2) கமகம் (3) ஆரோகணம்
(4) அவரோகணம் (5) ஜன்ய ராகம்

**36.** "உனது பழநிமலை எனுமூரைச் சேவித்தறியேனே" என்னும் பாடல் அடிகளைக் கொண்ட உருப்படி
(1) காவடிச் சிந்து (2) பதம் (3) திருப்புகழ்
(4) திருவருட்பா (5) குறவஞ்சி

**37.** மகுடத்துடன் முடிக்கப்படும் சிட்டைஸ்வரம் அமையப் பெற்ற உருப்படிகளுள் ஒன்று
(1) "ப்ரோசேவாரெவருரா..." - கமாஸ் (2) "ஸ்ரீமகா கணபதி..." - கௌளை
(3) "பவனுத..." - மோகனம் (4) "நீ ஸரிஸமான..." - பைரவி
(5) "மரிவேறேகதி..." - ஆனந்தபைரவி

**38.** "ஆரபிமானம்..." என்னும் இராகமாலிகையில் இடம்பெறும் இராகங்களில் மாயாமாளவகௌளையின் ஜன்ய ராகம்
(1) சாமா (2) லலிதா (3) பைரவி (4) தர்பார் (5) ஆரபி

**39.** "மைம்மருபூங்குழல்..." என்னும் தேவாரத்தில் "மெய்ம்மொழி ............ ............ ............ ............ விரும்பியதே" என்னும் பாடல் இடைவெளிக்குப் பொருத்தமான தேவார அடிகள்
(1) நான்மறையோர் மிழலை விண்ணிழி கோயில்
(2) இமையாத முக்கணீச வெம்நேச விதன்கொல்
(3) புகலி நிலாவிய புண்ணியனே எம்மிறையே
(4) யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய
(5) மான்விழி மங்கையொடும் பொய்ம் மொழி

**40.** "வலசி வச்சி..." எனும் நவராகமாலிகை வர்ணத்தில் இடம்பெறும் பாஷாங்க இராகங்கள்
(1) கேதாரம், காம்போஜி, மோஹனம் (2) ஸ்ரீ, பிலஹரி, பேகட
(3) யதுகுலகாம்போஜி, பிலஹரி, ஸ்ரீ (4) மோகனம், கேதாரம், யதுகுலகாம்போஜி
(5) பேகட, பிலஹரி, காம்போஜி

**41.** தியாகராஜஸ்வாமிகளும் கோபாலகிருஷ்ணபாரதியாரும் தமது பஞ்சரத்னக் கீர்த்தனைத் தொகுதியில் வராளி இராகத்தில் இயற்றிய கீர்த்தனைகள் முறையே
(1) துடுக்குகல, பிறவாத வரம் தாரும்
(2) எந்தரோமஹானு பாவுலு, சரணாகத மென்று
(3) ஸாதிஞ்சனே, பிறவாத வரம் தாரும்
(4) கன கன ருசிரா, ஆடிய பாதமே கதி
(5) கன கன ருசிரா, மறவாமல் எப்படியும்

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/






**42.** நாகர் கோவில் அருணாசல அண்ணாவி அவர்களால் ஷண்முகப்பிரியா இராகத்தில் இயற்றப்பட்ட தானவர்ணம்

(1) "உன்னையன்றி யாரென்னை..." (2) "தஞ்சம் என்றாலே..."
(3) "முருகா உன்மேல்..." (4) "இன்னம் என்மனம்..."
(5) "சுவாமி நீமனமிரங்கி..."

**43.** சுய ஆக்கச் செயற்பாடு அல்லாதது

(1) செயற்பாடு பற்றிய கலந்துரையாடல்
(2) பிரதி செய்யப்பட்ட ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்
(3) ஆக்கங்களைப் புத்தாக்கம் செய்தல்
(4) ஆக்கங்களுக்குத் தேவையான விடயங்களைச் சேகரித்தல்
(5) ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்கான ஆலோசனை செய்தல்

**44.** பின்வருவனவற்றுள் கானவாத்தியம் எனும் பிரிவுள் அடங்குவது

(1) 
(2) 
(3) 
(4) 
(5) 

- **45** தொடக்கம் **47** வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள அலங்காரப் பகுதியினை அவதானித்து விடையளிக்குக.

ஸகாமா | ஸாகமா | தா | தா ||
கமாதா | காமதா | நீ | நீ ||

**45.** மேற்கூறப்பட்ட அலங்காரத்தின் மூன்றாவது ஆவர்த்தனத்திற்குரிய ஸ்வர அமைப்பு

(1) மா த நீ | ம தா நீ | தா | தா ||
(2) ம தா நீ | மா த நீ | ஸ்ா | ஸ்ா ||
(3) ம தா நீ | ம தா நீ | ஸ்ா | ஸ்ா ||
(4) த நீ ஸ்ா | தாநிஸ்ா | க்ா | க்ா ||
(5) ம தா நீ | மா தா நி | ஸ்ா | ஸ்ா ||

**46.** மேற்குறித்த அலங்காரம் அமைந்துள்ள இராகத்திற்குப் பொருத்தமான ஆரோகணம்

(1) ஸரிகபதஸ் (2) ஸகமபதஸ் (3) ஸரிகபநிஸ் (4) ஸகமதநிஸ் (5) ஸரிகமதநிஸ்

**47.** மேற்குறித்த அலங்காரம் அமைந்துள்ள தாளம், ஒரு ஆவர்த்தனத்தில் வரும் அட்சர எண்ணிக்கை என்பன முறையே,

(1) கண்ட அட, 14 (2) திஸ்ர மட்டியம், 08
(3) சங்கீர்ண திரிபுடை, 13 (4) மிஸ்ர அட, 20
(5) கண்ட திரிபுடை, 10

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**48.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - 20 ஆவது மேளகர்த்தாவின் ஜன்னியம்
B - சதுஸ்ருதி தைவதத்தினை அன்னிய ஸ்வரமாகக் கொண்டது
C - பண் தக்கேசியை ஒத்தது
D - ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம்
E - அந்தர காந்தாரம் சற்றுக் கூடுதலாக ஒலிக்கும்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் பைரவி இராகத்தோடு தொடர்புடைய கூற்றுக்களை மாத்திரம் கொண்ட தெரிவு

(1) A, B, D (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**49.** மாணவன் ஒருவன் மெல்லிசைப்பாடல் ஒன்றை ஆக்கம் செய்வதற்கு முன்னர் அவதானிக்க வேண்டிய கற்றல் செயலொழுங்குகளின் ஆரம்ப செயற்பாடு

(1) தெரிவு செய்யப்பட்ட பாடலுக்கேற்ப மெட்டினை அமைத்துக்கொள்வார்.
(2) பாடலுக்குப் பொருத்தமான கருத்தை வெளிப்படுத்துவார்.
(3) பாடலின் பொதுவான தன்மையைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.
(4) பாடலாக்கத்திற்குப் பொருத்தமான கருத்தை வெளிப்படுத்துவார்.
(5) மெல்லிசைப் பாடலுக்குரிய இசைக்கருவியை நிர்ணயிப்பார்.

**50.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - இராமலிங்க அடிகளால் திருவருட்பாக்கள் இயற்றப்பட்டன.
B - பாலுஸ்வாமி தீட்சிதரினால் கர்நாடக இசைக்கு வயலின் அறிமுகப்படுத்தப்பட்டது.
C - சுப்பராம தீட்சிதரினால் சங்கீத சம்பிரதாய பிரதர்சினி எனும் நூல் இயற்றப்பட்டது.
D - சுப்பிரமணிய பாரதியாரால் எழுச்சிப் பாடல்கள் பல இயற்றப்பட்டன.
E - கோபால கிருஷ்ண பாரதியாரால் ஆத்மீகமும் தமிழிசையும் தமிழ்நாட்டில் வளர்க்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் 20 ஆம் நூற்றாண்டுடன் மாத்திரம் தொடர்புபட்டவை

(1) A, C (2) A, D (3) B, E (4) C, D (5) C, E

* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

✳ **'அ'** பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் **'ஆ'** பகுதியில் இருந்து **ஒரு** வினாவிற்கும் **'இ'** பகுதியில் இருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## 'அ' பகுதி

1. (i) 8 + 8 + U + O + O (U மேல் V, O மேல் |) எனும் தாளப் பிரஸ்தாரம் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சர எண்ணிக்கை யாது?

(ii) 72 மேளச்சக்கரத்தில் ருகுமிதுநு எனும் சங்கேதங்களால் குறிக்கப்படும் இராகம் யாது?

(iii) விஜயராகவ பஞ்சரத்தினத்தை இயற்றியவர் யார்?

(iv) "சரஸ்வதி விதியுவதி..." என்னும் கீர்த்தனை அமைந்துள்ள ராகத்தின் மேள எண் யாது?

(v) தானம் பாடும்போது பிரகாசிக்கும் இராகங்களை எவ்வாறு அழைப்பர்?

(vi) திருமயிலைக் குறவஞ்சியை இயற்றிய ஈழத்து இசைவாணர் யார்?

(vii) செம்பை வைத்திய நாத பாகவதரால் 'சங்கீதரத்னாகரம்' எனும் சிறப்புப் பட்டம் பெற்றவர் யார்?

(viii) ஹிந்துஸ்தானி இசையில் 'அஹிர்பைரவ்' என அழைக்கப்படும் இராகம் யாது?

(ix) Pastoral Symphony ஐ இயற்றிய ஐரோப்பிய இசைமேதை யார்?

(x) அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணிற்கு இணையான இராகம் யாது?

(xi) மனோதர்ம இசையின் பிரதான அம்சமான பல்லவி பாடுதலில் உள்ள இரு பாகங்களும் எவை?

(xii) பஞ்சபுராணம் பாடும்போது பெரும்பாலும் ஆனந்தபைரவி இராகத்தில் பாடப்படும் திருமுறைகளைக் குறிப்பிடுக.

(xiii) ஐரோப்பிய சங்கீதத்தில் பெண்களுக்குரிய குரல்வகைகள் **இரண்டினைத்** தருக.

(xiv) ஹிந்துஸ்தானி இசையில் இடம்பெறும் **இரு** தாளங்களைப் பெயரிடுக.

(xv) இசைத்துறையில் இளம் நுண்கலைமாணி (BFA) எனும் சிறப்புப் பட்டத்தினை வழங்கும் இலங்கையிலுள்ள **இரண்டு** உயர்கல்வி நிறுவனங்களைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## 'ஆ' பகுதி

**2.** தாள தசப் பிராணங்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
(i) தாள தசப் பிராணங்களைக் குறிப்பிடுக.
(ii) இவற்றுள் விரும்பிய **ஐந்தினை** விளக்குக.

(20 புள்ளிகள்)

**3.** பின்வரும் இசை உருப்படிகளுள் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றினை விளக்குக.
(i) கீத கோவிந்தம் என அழைக்கப்படும் உருப்படி
(ii) தில்லானா
(iii) சந்தப் பாவலர் பெருமானால் அருளப்பட்ட பாடல் வகை

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

## 'இ' பகுதி

**4.** பாடத்திட்டத்திற்கமைய நீர் கற்ற ஆதிதாள தான வர்ணம் **ஒன்றினை** ஸ்வர தாள அங்க அடையாளங்களுடன் முழுமையாக எழுதுக.
(இயற்றியவர் பெயர், இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்)

(20 புள்ளிகள்)

**5.** 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள் கர்நாடக சங்கீதத்திற்கு அளப்பெரும் தொண்டாற்றியுள்ளார். இவர் தொடர்பாக வினவப்படும் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
(i) அவரது இளமைக் காலத்தையும் கல்விப் பின்னணியையும் பற்றி தெளிவுபடுத்துக.
(ii) உயர்பீடங்களில் அவர் வகித்த பதவிகளைக் குறிப்பிடுக.
(iii) பெற்ற பட்டங்கள் விருதுகளைப் பெயரிடுக.
(iv) அவர் இயற்றிய நூல்கள், மொழி பெயர்த்த நூல்கள் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(20 புள்ளிகள்)

**6.** பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)
(i) 'மாதயை நிதி' எனும் சௌககால கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
(ii) ஸ்ரீரஞ்சனி
(iii) ஹம்பீர் என்று அழைக்கப்படும் இராகம்
(iv) ஹிந்துஸ்தான் காபி

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

**7.** (i) பயான், தயான் ஆகிய பாகங்களை உடைய தாளவாத்தியத்தின் பெயரினைக் குறிப்பிடுக.
(ii) மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறித்துப் பெயரிடுக.
(iii) மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
(iv) இவ் வாத்தியம் வாசிக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
(v) மேற்கூறப்பட்ட வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யமடைந்த கலைஞர்கள் **மூவரைக்** குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

**8.** மேலைத்தேய இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய "பாக்" அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் எழுதுக.

**அல்லது**

உமது பாடசாலைக் கலைவிழாவில் இடம்பெற்ற குழுஇசைப்பாடல் நிகழ்ச்சி **ஒன்றினைத்** தயார் செய்யும் செயற்பாட்டொழுங்கினைச் சுருக்கமாகத் தருக.

(20 புள்ளிகள்)

***

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/